ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1895/44 - 2015 ජනවාරි මස 02 වැනි සිකුරාදා - 2015.01.02

*1895/44 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**சனாதிபதித் தேர்தல் - 2015.01.08**

**சனாதிபதித் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை வாக்கெடுப்புக்கு 48 மணித்தியாலங்களுக்கு முன்னர் முடிவுறுத்துதல்**

2015, சனவரி 08 ஆந் திகதி நடாத்தப்படவிருக்கும் சனாதிபதித் தேர்தல் சார்பான அனைத்து பிரசார நடவடிக்கைகளும், 2015.01.05 ஆந் திகதி நள்ளிரவு 12.00 மணியுடன் முடிவடையவுள்ளன. தேர்தலொன்றின்போது மௌன காலப்பகுதியெனக் குறிப்பிடப்படும் அதிலிருந்து வாக்கெடுப்பு முடிவடையும் வரையிலான காலப்பகுதியினுள் இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களினூடாக எந்தவொரு வேட்பாளரையும் ஊக்குவிக்கும் வகையில் அல்லது பின்னடையச் செய்யும் வகையிலான எந்தவொரு பிரசாரத்தையும் மேற்கொள்ளக்கூடாது. ஆயினும், 2015.01.05 ஆந் திகதி சனாதிபதி வேட்பாளர்களது இறுதிப் பிரசார நடவடிக்கைகள் இடம்பெறுமாதலால் அவற்றின் தகவல்களை மாத்திரம் 2015.01.06 ஆந் திகதி வெளியிட/ பிரசாரப்படுத்த இடமளிக்க முடியும். அன்றைய தினம் வேறு கட்சிகளின்/ வேட்பாளர்களின் பிரசார வர்த்தக அறிவித்தல்கள், அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த விவரணங்கள்/கடிதங்கள்/நிகழ்ச்சித் திட்டங்கள் போன்றவற்றை வெளியிடுவதிலிருந்து அல்லது பிரசாரப்படுத்துவதிலிருந்து தவிர்ந்திருத்தல் வேண்டும்.

இலத்திரனியல் ஊடகங்களினூடாக 2015.01.06 ஆந் திகதி மற்றும் 07 ஆந் திகதி ஆகிய இரண்டு நாட்களினுள் அத்துடன் 2015.01.08 ஆந் திகதி 1800 மணி வரையிலும் கடந்த காலங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்கள், எதிர்கால அபிவிருத்தித் திட்டங்கள் சார்பான நிகழ்ச்சிகள், வரவு செலவுத் திட்ட யோசனைகளை நடைமுறைப்படுத்தல் தொடர்பான நிகழ்ச்சிகள், யுத்த வெற்றி தொடர்பான நிகழ்ச்சிகள் போன்றவற்றை புதிதாக ஒலி/ ஒளிபரப்புவதன் மூலமோ அல்லது மீள் ஒலி/ ஒளிபரப்புவதன் மூலமோ கட்சிகளை/வேட்பாளர்களை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவோ போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் பங்குபற்றிய சமய வைபவங்கள் உள்ளிட்ட பல்வேறு வைபவங்களை மீள் ஒலி/ ஒளிபரப்பாகவோ பிரசாரப்படுத்துவதன் மூலம் கட்சிகளை/வேட்பாளர்களை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவோ வேறொரு வேட்பாளரை பின்னடையச் செய்யக்கூடியவாறான எந்தவொரு நிகழ்ச்சிகளையும் வெளியிடுவதிலிருந்து/பிரசாரப்படுத்துவதிலிருந்து தவிர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அச்சு ஊடகங்களினூடாகவும் இவ்வாறான வேட்பாளர்கள் ஊக்குவிப்புக்குள்ளாகக் கூடியவாறான அல்லது பின்னடையச் செய்யக்கூடியவாறான விடயங்களை முன்கூறப்பட்ட மௌன காலப்பகுதியினுள் வெளியிடுதலாகாதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

மஹிந்த தேசப்பிரிய,
தேர்தல்கள் ஆணையாளர்.

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
2015, சனவரி 02.

01-556



இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.